தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 255 | 4 Pages | 13.4.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 255 | 4 பக்கங்கள் | 13.4.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்**
**மற்றை யவர்கள் தவம்**

**விளக்கம்:**
துறந்தவர்க்கு உணவு முதலியனக் கொடுத்து உதவவேண்டும் என விரும்பி மற்றவர்கள் (இல்லறத்தினர்) தவம் செய்தலை மறந்தார்களோ

## 'பீகார் தேர்தல் நேரத்தில் ராணா தூக்கிலிடப்படுவார்'



### பா.ஜ.க.வை சாடிய சஞ்சய் ராவத்

மும்பை, ஏப்.13

மும்பை தாக்குதல் குற்றவாளி தஹாவூர் ராணா நீண்ட சட்டப் போராட்டத்திற்கு பிறகு இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டு உள்ளார். இதனை வரவேற்றுள்ள மராட்டிய முன்னாள் முதல்மந்திரி உத்தவ் தாக்கரே தலைமையிலான உத்தவ் சிவ சேனா கட்சியின் மூத்த தலைவர் சஞ்சய் ராவுத், தேர்தல் ஆதாயத்திற்காக அதை அரசியலாக்குவதாக பா.ஜ.க.வை எச்சரித்தார்

இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில்,

"பயங்கரவாதி தஹாவூர் ராணாவை உடனடியாக தூக்கிலிட வேண்டும். ஆனால் இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள பீகார் தேர்தல் நேரத்தில் அவர் தூக்கிலிடப்படுவார். ராணாவை இந்தியாவுக்கு கொண்டுவர 16 வருடங்களாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த முயற்சி காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தொடங்கியதாகும். எனவே ராணாவை இந்தியா கொண்டு வந்ததற்கான பெருமையை யாரும் தங்களுக்கு சொந்தமானது என்று கூறி மார்தட்டிக்கொள்ள முடியாது" என்று கூறினார்.

மும்பை தாக்குதல் சம்பவத்தில் உயிருடன் பிடிபட்ட ஒரே பயங்கரவாதி அஜ்மல் கசாப் விசாரணைக்கு பிறகு கடந்த 2012ம் ஆண்டு புனே எரவாடா சிறையில் தூக்கில் போடப்பட்டது குறிப்பிடத்தக்கது.


உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM


# ரூ.32.64 கோடி செலவில் 199 புதிய வகுப்பறை கட்டடங்கள் :

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை ஏப்.13

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 21 திருக்கோவில்களின் மூலம் கிடைக்கப்பெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் சுத்தத் தங்கக் கட்டிகளை தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்ததற்கான பத்திரங்கள் தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (11.04.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் 21 திருக்கோவில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களில் திருக்கோயிலுக்கு பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கி கிடைக்கபெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் சுத்தத் தங்கக் கட்டிகளை பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத்திட்டத்தில் முதலீடு செய்ததற்கான அடையாளமாக திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோவில் ஆகிய திருக்கோவில்களின் அறங்காவலர் குழு தலைவர்கள்வி.எஸ்.பி. இளங்கோவன், கே.எம். சுப்பிரமணியன், இணை ஆணையர்கள் எ.ஆர். பிரகாஷ், செ.மாரிமுத்து, பி. ரமேஷ் மற்றும் உதவி ஆணையர்/செயல் அலுவலர் இரா. முத்துராமலிங்கம் ஆகியோரிடம் தங்க முதலீட்டிற்கான பத்திரங்களை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ளதிருக்கோவில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோவில்களுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருவதோடு, திருக்கோவில்களுக்கு வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு முனைப்பான திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. 21 திருக்கோவில்களின் மூலம் கிடைக்கபெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் சுத்தத் தங்கக் கட்டிகளை தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்தல் தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், 20212022 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "கடந்த 10 ஆண்டுகளாக திருக்கோவில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று



பொன் இனங்களில், திருக்கோயிலுக்குத் தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, ஏனைய இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சொக்கத்தங்கமாக மாற்றி திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து பெறப்படும் வட்டி மூலமாக திருக்கோவில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளை கண்காணிப்பதற்கு 3 மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஓய்வு பெற்ற மாண்பமை நீதியரசர்கள் தலைமையிலான குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும்" என அறிவிக்கப்பட்டது. 21 திருக்கோவில்களின் பெயரில் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளதற்கு அடையாளமாக திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோவில் ஆகிய திருக்கோவில்களின் அறங்காவலர் குழு தலைவர்கள், இணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்/செயல் அலுவலர் ஆகியோரிடம் அதற்கானபத்திரங்களைமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இத்திட்டத்தின் மூலம் திருக்கோவில்களில் பயன்பாட்டில் இல்லாத பலமாற்று பொன் இனங்களை உருக்கி திருக்கோவில்களுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளதோடு, அதன்மூலம் கிடைக்கப்பெறும் வட்டித்தொகை அந்தந்த திருக்கோவிலின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதியரசர் துரைசாமி ராஜு மற்றும் ஓய்வுபெற்றஐகோர்ட்டுநீதியரசர்கள் ரவிச்சந்திர பாபு, ஆர்.மாலா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் டாக்டர்சி.பழனி, இ.ஆ.ப., பாரதஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் ஜோபி ஜோஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இரட்டை இலை சின்னம் யாருக்கு..? இறுதி விசாரணையை தொடங்கிய தேர்தல் ஆணையம்

புதுடெல்லி, ஏப்.13

இரட்டை இலை சின்னத்தை எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. பயன்படுத்த தடை கோரியும், தங்களுக்கு ஒதுக்க கோரியும் ஓ.பன்னீர்செல்வம், ஓ.பி. ரவீந்திரநாத் உள்ளிட்டோர் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கை தேர்தல் ஆணையம் விசாரிக்கலாம் என சுப்ரீம்கோர்ட்டு உத்தரவிட்டிருந்தது.

இந்த சூழலில் தாக்கல் செய்யப்பட்ட புகார்களின் அடிப்படையில் தேர்தல் கமிஷன் விசாரணையை நடத்தி வந்தது. ஆனால் எடப்பாடி பழனிசாமி தரப்பிலான வாதத்தை ஏற்று இந்த விசாரணைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டது. பின்னர் கடந்த பிப்ரவரி மாதம் அந்த தடை நீக்கப்பட்டது. விசாரணையை தொடர தேர்தல் கமிஷனுக்கு கோர்ட்டு பச்சைக்கொடி காண்பித்தது.

1968ம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு விதிகளின் கீழ், கட்சியில் இரு பிரிவினருக்கு இடையே சின்னம் தொடர்பாக ஏதேனும் உரிமை கோரல் இருந்தால் அதை விசாரித்து தேர்தல் கமிஷன் இறுதி முடிவு எடுக்கலாம் என அந்த விதி தொடர்பான 15வது பத்தியில் குறிப்பிடப்பட்டு இருப்பதாக தெரிகிறது. இந்த விதியை பயன்படுத்தி இந்திய தேர்தல் கமிஷன் இதற்கு முன்பு பல கட்சிகளின் பிரச்சினையை முடித்து வைத்துள்ளது. இதன்படி இரட்டை இலை சின்னம் வழக்கிலும் தேர்தல் கமிஷன் ஏதாவது முடிவு எடுக்கலாம் என கூறப்படுகிறது.

ஆனால் 15வது பத்தியின் ஷரத்துகள் அ.தி.மு.க. விவகாரத்துக்கு பொருந்தாது என எடப்பாடி பழனிசாமி தரப்பினர் கூறுகிறார்கள். ஏனென்றால் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களில் 2,500க்கும் மேற்பட்டோர் எடப்பாடி பழனிசாமியை பொதுச்செயலாளராக தேர்ந்தெடுத்து இருப்பதால் கட்சியில் கோஷ்டி பூசல் எதுவும் இல்லை என எடப்பாடி பழனிசாமி தரப்பில் வாதிடப்படுகிறது. இந்த நிலையில், சின்னம் ஒதுக்கும் விவகாரத்தில் இறுதி விசாரணையை தேர்தல் ஆணையம் தொடங்கி உள்ளது. அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இரட்டை இலை விவகாரத்தில் தேர்தல் ஆணையத்தின் இறுதி உத்தரவு விரைவில் வெளியாக உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பூரில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டுமானங்களை இடிக்க சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஏப்.13

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தைச் சேர்ந்தவர் வக்கீல் எல். முருகானந்தம். இவர். சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில், "சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின்படி பள்ளிக்கூட கட்டிடங்கள் தரைத்தளம் மற்றும் 2 மேல் தளம் கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால், தாராபுரம், கண்ணன் நகரில் உள்ள தேன்மலர் மேல்நிலைப்பள்ளியில் 2011ம் ஆண்டு தரைத்தளம் மற்றும் 2 மேல்தளத்துக்கு திட்ட அனுமதி பெற்றுவிட்டு சட்டவிரோதமாக 3வது தளத்தை கட்டப்பட்டுள்ளன. இந்த சட்டவிரோதமாக தளத்தை இடிக்க வேண்டும் என்று அரசுக்கு மனு அனுப்பினேன். ஆனால், பள்ளிக்கூட உரிமையாளர் தண்டபாணி, கார்த்திகேயன் ஆகியோர் கட்டிட வரையறை செய்யக்கோரி அரசிடம் மேல்முறையீடு செய்துள்ளேன். இந்த மேல்முறையீட்டு மனுவை விரைவாக பரிசீலிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று இந்த ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இதன்படி, இவரது மனுவை பரிசீலிக்கும்படி 2015ம் ஆண்டு ஐகோர்ட்டு டிவிசன் பெஞ்ச் உத்தரவிட்டது.

அரசும் அந்த மேல்முறையீட்டு மனுவை பரிசீலித்து 2015ம் ஆண்டு உத்தரவிட்டது. அதன்பின்னர், இதுவரை அரசு அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்று கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், கே.ராஜசேகர் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் எல்.முருகானந்தம் ஆஜராகி வாதிட்டார்.

நகரமைப்புதுறை உதவி இயக்குனர் தாக்கல் செய்த பதில் மனுவில், பள்ளிக்கூடத்தில் சட்டவிரோத கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதை கண்டுபிடித்துள்ளோம்" என்று கூறியிருந்தார். மனுதாரர் தரப்பில் ஆஜரான வக்கீல், பள்ளிக்கூடத்தில் ஏராளமான மாணவர்கள் படிப்பதால், இந்த கல்வியாண்டு முடியும் வரை பள்ளி நிர்வாகத்துக்கு வாய்ப்பு வழங்கவேண்டும் என்று கூறினார்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், பள்ளியில் அனுமதியின்றி சட்டவிரோதமாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்று உதவி இயக்குனர் கூறும் குற்றச்சாட்டை உண்மையல்ல என்று பள்ளியின் உரிமையாளர்கள் தண்டபாணி, கார்த்திகேயனால் முடியவில்லை. எனவே, சட்டவிரோத கட்டிட பகுதியை மே மாதம் கோடை விடுமுறையில் அதிகாரிகள் இடித்து அகற்ற வேண்டும். கட்டிட திட்ட அனுமதியின்படி அந்த கட்டிடத்தை பள்ளி நிர்வாகம் புதுபித்துக்கொள்ளலாம் என்று உத்தரவிட்டுள்ளனர்.

# திருவள்ளூர்: தண்டவாளத்தை கடக்க முயன்ற 2 பேர் ரெயில் மோதி பலி

திருவள்ளூர், ஏப்.13

திருவள்ளூர் அடுத்த புட்லூர் செவ்வாப்பேட்டை ரெயில் நிலையங்களுக்கு இடையே நேற்று சுமார் 35 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் கவனக்குறைவாக தண்டவாளத்தை கடக்க முயன்றார். அப்போது அந்த வழியாக வந்த மின்சார ரெயில் மோதி அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

அதேபோல திருவள்ளூர் ரெயில் நிலையம் அருகே நேற்று சுமார் 35 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் தண்டவாளத்தை கடக்க முயன்றபோது ரெயில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ரெயில் மோதி இறந்த நபர்கள் யார்? யார்? என தெரியவில்லை. உயிரிழந்தவர்களின் உடல்களை திருவள்ளூர் ரெயில்வே இருப்பு பாதை போலீசார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து அவர்களது விவரம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 6 புதிய ரக பீர் வகைகள் அறிமுகம்: தமிழகத்தில் விற்பனை படு ஜோர்

சென்னை, ஏப். 13

தமிழ்நாட்டில் உள்ள டாஸ்மாக் மதுபானக்கடைகளில் பல்வேறு நிறுவனங்களின் பிராந்தி, விஸ்கி, ஒயின், ரம் மற்றும் பீர் வகைகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது கோடை காலமாக இருப்பதால் வாடிக்கையாளர்கள் பீர் வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர். அதற்கு ஏற்ப கடைகளுக்கு அதிக பீர் வகைகள் அனுப்பப்பட்டு வருகிறது. இதனால் தினமும் 60 ஆயிரம் பெட்டிகளாக இருந்த பீர் விற்பனை 1 லட்சம் பெட்டிகளை தாண்டியுள்ளது.

டாஸ்மாக்கில் 35 பீர் வகைகள் விற்கப்படுகின்றன. மேலும் புதிய வகை மதுபானங்களை மக்கள் கேட்பதால் கர்நாடகா, தெலுங்கானா மாநிலங்களில் விற்கப்படும் 6 புதிய ரக பீர் வகைகளை விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் தெலுங்கானா, கர்நாடகா மாநிலங்களில் விற்கப்படும் பிளாக் பஸ்டர் பீர் கடந்த வாரம் டாஸ்மாக் கடைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய ரக பீர் இப்போது அதிகமாக விற்பனையாகி வருகிறது. இதேபோல் கர்நாடகாவில் தயாரிக்கப்பட்ட பிளாக் போர்ட், உட்பெக்கர் லார்ஜர் ஆகிய போர் வகைகளும் டாஸ்மாக் கடைகளுக்கு வந்துவிட்டது.

இதேபோல் பார்லி வகை தானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் பீர் வகைகளான உட்பெக்கர், லெகர் பிளையிங் மங்கி லெகர், ஹண்டர் சூப்பர் ஸ்டிராங் ஆகிய பீர் வகைகளும் டாஸ்மாக் கடைகளில் விற்பனைக்குவந்துள்ளது.

வெளிமாநிலங்களில் இருந்து 330 மி.லி. டின் (490 மி.லி) பாட்டில் (650 மி.லி) வகைகளில் பீர் வகைகள் விற்பனைக்கு வந்துள்ளதால் தமிழகத்தில் மதுபிரியர்கள் போட்டி போட்டு பீர் வகைகளை வாங்கி செல்கின்றனர்.

கோடைக்காலம் என்பதால் தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் பீர் விற்பனை படுஜோராக நடைபெற்று வருவதாக விற்பனையாளர்கள் கூறுகின்றனர்.

# காஞ்சிபுரத்தில் நாய் கடித்து 8ம் வகுப்பு மாணவர் பலி

காஞ்சிபுரம், ஏப்.13

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியம் வடக்குப்பட்டு ஊராட்சி புதிய காலனி பகுதியை சேர்ந்தவர் சிவசங்கர். இவருடைய மகன் விஸ்வா (வயது 13). 8ம் வகுப்பு படித்து வந்த விஸ்வா, கடந்த 7ந்தேதி வீட்டின் அருகே விளையாடிகொண்டிருந்த போது அவனை நாய் கடித்தது. வலது கையில் காயம் ஏற்பட்ட விஸ்வாவை அருகே உள்ள ரெட்டிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

இந்த நிலையில் விஸ்வாவுக்கு வயிற்றுவலி மற்றும் தலைவலி ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து பெற்றோர் விஸ்வாவை ஒரகடம் அருகே உள்ள மாத்தூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

பின்னர் ஸ்ரீபெரும்புதூர் அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி விஸ்வா பரிதாபமாக இறந்தார். இதுதொடர்பாக ஒரகடம் போலீசார் வழக்குப்பதிவு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 16 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை: வாலிபர் மீது போக்சோ வழக்கு

கன்னியாகுமரி, ஏப்.13

கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் அருகே உள்ள வெள்ளிச்சந்தை பகுதியை சேர்ந்தவர் முருகன் என்ற அரவிந்த் (26). இவருக்கும் 16 வயதுடைய ஒரு சிறுமிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. அந்த சிறுமி 8 ம் வகுப்பு வரை படித்துவிட்டு ஒரு வலை கம்பெனியில் வேலை செய்து வருகிறார். சிறுமியின் பெற்றோர் வேலைக்காக தினமும் நாகர்கோவிலுக்கு செல்வது வழக்கம்.

இந்தநிலையில் சம்பவத்தன்று சிறுமியின் பெற்றோர் வேலைக்கு சென்ற பிறகு முருகன் அவரது வீட்டுக்கு வந்தார். அவர் சிறுமியிடம் நைசாக பேசி அந்த பகுதியில் உள்ள நூலக கட்டிடம் அருகே அழைத்து சென்று திருமண ஆசைக்காட்டி பலாத்காரம் செய்ததாக தெரிகிறது. இதையடுத்து வீட்டுக்கு வந்த சிறுமி தனக்கு நேர்ந்த கொடுமையை பெற்றோரிடம் கூறி அழுதார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சிறுமியின் தாயார் முருகனை சந்தித்து அதுபற்றி கேட்டார். அப்போது முருகன் சிறுமியின் தாயை மிரட்டியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து சிறுமியின் தாயார் குளச்சல் மகளிர் போலீசில் புகார் செய்தார். அந்த புகாரின் அடிப்படையில் முருகன் மீது போக்சோ பிரிவின்கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதற்கிடையே முருகன் தலைமறைவாகி விட்டார். அவரை போலீசார் தேடி வருகின்றனர். முருகன் மீது வெள்ளிச்சந்தை போலீசில் ஏற்கனவே 3 வழக்குகள் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாஜக அதிமுக கூட்டணி: மக்கள் பாடம் புகட்டுவார்கள் கனிமொழி எம்.பி. பேட்டி



சென்னை, ஏப்.13

சென்னையில் திமுக துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

பாஜகவுடன் கூட்டணி வைத்து அதிமுகவுக்கு எடப்பாடி பழனிசாமி துரோகம் செய்துள்ளார். பாஜகவுடன் கூட்டணி இல்லை என்று எடப்பாடி பழனிசாமி கூறியிருந்தார். அவர்கள் பிரிந்துவிட்டதாக சொன்னாலும் கூட்டணி தொடரும் என்பதை சுட்டிக்காட்டினர். பாஜகவுடன் கூட்டணியை அறிவிக்கும் நிர்பந்தத்திற்கு அதிமுகவினர் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நடத்திய காசி தமிழ் சங்கமத்தினால் தமிழ் எப்படி வளர்ந்தது என தெரியவில்லை. தமிழுக்காக பாஜக என்ன செய்தது. அண்ணா, அம்மையார் ஜெயலலிதாவை தரக்குறைவாக பேசியவரோடு கூட்டணியை அமைத்திருக்கிறார். எடப்பாடி பழனிசாமி செயல் தன்னுடைய கட்சி, தமிழ்நாட்டு மக்களுக்கு செய்த மிகப்பெரிய துரோகம்.

கல்வி நிதி, வக்பு சட்டம், நீட் ஆகியவற்றை எதிர்ப்பதாக சொன்ன அதிமுகவின் நிலைப்பாடு என்ன? இதையெல்லாம் பேசியவர்களோடு மேடையில் அமர்ந்திருக்கிறார் அவர். எடப்பாடி பழனிசாமி மேடையில் பேச கூட உரிமை இல்லாத நிலையில் கூட்டணி குறித்து அறிவிக்கப்படுகிறது. தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்யும் பாஜகவுக்கு ரத்தின கம்பளத்தை விரித்துள்ளது அதிமுக. அதிமுக செயலுக்கு தகுந்த பாடத்தை வரக்கூடிய தேர்தலில் மக்கள் தருவார்கள். நாடு முழுவதும் உள்ள எதிர்க்கட்சி தலைவர்கள் மீது ஐ.டி, அமலாக்கத்துறையை பயன்படுத்துகிறார்கள். திமுக ஆட்சிக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. வரக்கூடிய தேர்தலில் அதை தெளிவாக பார்க்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மனைவி விஷம் குடித்து தற்கொலை.. விசாரணைக்கு பயந்து கணவர் எடுத்த விபரீத முடிவு





திருநெல்வேலி ஏப்.13

நெல்லை மாவட்டம் ராதாபுரம் அருகே இலங்கை அகதிகள் முகாமில் வசிப்பவர் தியாகராஜன். இவருடைய மகள் கீதா (வயது 23). இவருக்கும், திருச்சி கொட்டாம்பட்டியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் உறவினரான நந்தகுமார் (27) என்பவருக்கும் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது.

திருமணத்துக்கு பிறகு அவர் சரிவர வேலைக்கு செல்லாததால் கணவன்மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது. இதனால் கீதா கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு கணவரை பிரிந்து சமூகரெங்கபுரத்தில் உள்ள பெற்றோர் வீட்டுக்கு வந்துவிட்டார். இதனையடுத்து நந்தகுமார் அவ்வப்போது மனைவியை பார்க்க சமூகரெங்கபுரத்திற்கு வந்து சென்றுள்ளார்.

அதேபோல் கடந்த சில நாட்களுக்கு முன்பு சமூகரெங்கபுரத்திற்கு வந்த நந்தகுமார் அங்கேயே வேலை செய்துவிட்டு மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார். நேற்று முன்தினம் காலையில் கணவன்மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. பின்னர் நந்தகுமார் வீட்டைவிட்டு வெளியே சென்று விட்டார்

இதில் மனமுடைந்து காணப்பட்ட கீதா வீட்டில் இருந்த ஹோர்டையை (விஷம்) குடித்தார். இதனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் உடனடியாக அவரை மீட்டு நாகர்கோவில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர் அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த நந்தகுமார், மனைவியின் உறவினர்கள் தன்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம், மேலும் போலீசாரும் விசாரணைக்கு அழைத்து சென்று விடுவார்கள் என்ற அச்சத்தில் வீட்டுக்குள் சென்று மனைவியின் சேலையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# அருண் நேருவிடம் இருந்து முக்கிய ஆதாரங்கள் பறிமுதல் அமலாக்கத்துறை



சென்னை, ஏப்.13

அமைச்சர் கே.என். நேரு மற்றும் அவரது உறவினர்கள் தொடர்புடைய இடங்களில் கடந்த 7ம் தேதி முதல் நேற்று வரை சட்டவிரோத பணபரிமாற்ற வழக்கில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். அதில் கே.என்.நேருவின் சகோதர் ரவிச்சந்திரன் வீடு மற்றும் அவரது அலுவலகத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. ரவிச்சந்திரனின் வீடு மற்றும் அலுவலகத்தில் நடைபெற்ற சோதனையில் பல்வேறு ஆவணங்களை அமலாக்கத்துறை அதிகாரிகள் எடுத்து சென்றதாக கூறப்படுகிறது. நுங்கம்பாக்கம் அலுவலகத்தில் ரவிச்சந்திரனிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில், சட்டவிரோத பணபரிமாற்றம், சிபிஐ வழக்கு தொடர்பாக கேள்விகள் கேட்கப்பட்டதாக தெரிகிறது. ரவிச்சந்திரனிடம் சுமார் 5 மணி நேரத்திற்கு மேலாக விசாரணை செய்த அதிகாரிகள் அவற்றை வீடியோகவும், எழுத்துப்பூர்வமாகவும் பதிவு செய்தனர்.

இந்தநிலையில் அமலாக்கத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கே.என்.ரவிச்சந்திரன், எம்.பி., அருண் நேரு ஆகியோரிடம் இருந்து முக்கிய ஆதாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் கேன்.என். நேரு உறவினர் வீடுகளில் நடந்த சோதனையிலும் பல ஆதாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகத்துறை அதிகாரிகள் பணியிடமாற்றத்திற்கு லஞ்சம் வாங்கியதற்கான ஆதாரங்கள் சிக்கி உள்ளன. திட்டமிட்ட நோக்கங்களுக்காக பெருமளவிலான ஹவாலா பரிவர்த்தனை நடந்துள்ளது.

டிஜிட்டல் பதிவுகள், சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சட்டவிரோத பண பரிமாற்றத்தின் மூலம் வாங்கிய சொத்துக்கள் மற்றும் வருமானம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்சி விமான நிலையத்தில் ரூ.20 லட்சம் வெளிநாட்டு பணம் பறிமுதல்



திருச்சி, ஏப்.13

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அதிகாலை 4 மணி அளவில் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் சார்ஜா செல்ல தயாராக இருந்தது. அந்த விமானத்தில் செல்ல இருந்த பயணிகளின் உடைமைகளை சுங்கத்துறையின் வான் நுண்ணறிவுப்பிரிவு அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது, 4 பயணிகளின் உடைமைகளில் வெளிநாட்டு பணம் (500 சவுதி அரேபிய ரியால்) தலா 44 தாள்கள் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அவர்களிடம் இருந்து மொத்தம் ரூ.20 லட்சத்து 16 ஆயிரத்து 390 மதிப்புள்ள வெளிநாட்டு பணத்தை கைப்பற்றினர். தொடர்ந்து 4 பேரிடமும் சுங்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# புதுக்கோட்டை அருகே ஜல்லிக்கட்டில் சீறிப்பாய்ந்த காளைகள்: 31 பேர் காயம்



புதுக்கோட்டை, ஏப்.13

புதுக்கோட்டை அருகே மாங்கனாம்பட்டியில் வீரமகாளியம்மன் கோவில் திருவிழாவையொட்டி ஜல்லிக்கட்டு நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை மாவட்டம் உள்பட பக்கத்து மாவட்டங்களில் இருந்து ஜல்லிக்கட்டு காளைகளை அதன் உரிமையாளர்கள் அழைத்து வந்திருந்தனர். இதேபோல மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர்.

வாடிவாசல் வழியாக காளைகள் ஒவ்வொன்றாக டோக்கன் வரிசைப்படி அவிழ்த்து விடப்பட்டன. இதில் காளைகள் சீறிப்பாய்ந்தன. இதனை மாடுபிடி வீரர்கள் போட்டிப்போட்டு அடக்கினர். இதில் சில காளைகள் வீரர்களிடம் பிடிபடாமல் பாய்ந்தோடின. மேலும் களத்தில் நின்று வீரர்களை தெறிக்கவிட்டன. வீரர்களும் சளைக்காமல் காளையின் தமிலை பிடித்து அடக்க முயன்றனர். ஜல்லிக்கட்டு நடைபெற்றதை திரளான பொது மக்கள் பார்வையிட்டனர். அவர்கள் கைத்தட்டி ஆரவாரம் செய்தனர். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் சரக்கு வாகனங்களின் மேல் ஏறி நின்றும் வேடிக்கை பார்த்தனர்.

ஜல்லிக்கட்டில் 572 காளைகள் அவிழ்க்கப்பட்டன. 250க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். காளைகள் முட்டியதில் 31 பேர் காயமடைந்தனர். அவர்களுக்கு அங்கிருந்த மருத்துவக்குழுவினரால் சிகிச்சை அளிக்கப்பட்டது. காலை 8.40 மணிக்கு தொடங்கிய ஜல்லிக்கட்டு மாலை 3.35 மணிக்கு முடிவடைந்தது. ஜல்லிக்கட்டையொட்டி பாதுகாப்பு பணியில் ஏராளமான போலீசார் ஈடுபட்டனர்.

# திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல்



திருச்செந்தூர், ஏப்.13

பவுர்ணமி, அமாவாசை நாட்களில் திருச்செந்தூரில் கடல் உள்வாங்குவது வாடிக்கையாக நிகழ்கிறது. நாளை (சனிக்கிழமை) பவுர்ணமி தினமாகும். இந்த நிலையில் இன்று திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கடற்கரையில் சுமார் 60 அடி தூரத்துக்கு கடல் உள்வாங்கியது.

இதனால் பாசிபடர்ந்த பாறைகள் வெளியே தெரிந்ததையும், எனினும் பக்தர்கள் அச்சமின்றி வழக்கம்போல் புனித நீராடியதையும் படத்தில் காணலாம். அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்களில் கடல் உள்வாங்குவது வழக்கம்தான் என அப்பகுதியினர் தெரிவித்தனர்.

# பொன்முடியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்



சென்னை, ஏப்.12

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"அமைச்சர் பொன்முடி, ஒரு பொதுக்கூட்டத்தில் பெண்களை தரக்குறைவாக, அநாகரீகமாக, நாகூசும் வார்த்தைகளால் பேசி இருக்கிறார். இந்திய அரசமைப்பு சட்டத்தின் கீழ் பதவி ஏற்றுக்கொண்ட பொன்முடி, பெண்களை கேவலமாக பேசுவது என்பது முறையற்ற செயல். இது ஏற்புடையதல்ல.

பொன்முடியின் நாகரிகமற்ற பேச்சுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஒருவரை அமைச்சர் பதவியில் வைத்துக் கொண்டிருப்பது பெண் இனத்திற்கு செய்யும் துரோகம். எனவே, பொன்முடியை அமைச்சர் பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டிய தார்மீக பொறுப்பு முதல்அமைச்சருக்கு உள்ளது."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 2024ம் ஆண்டு கலைஞர் எழுதுகோல் விருது பெற ஏப்ரல் 30க்குள் விண்ணப்பிக்கலாம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஏப்.13

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜுன் 3ம் நாளன்று, ஒரு சிறந்த இதழியலாளருக்கு "கலைஞர் எழுதுகோல் விருது" வழங்கி கௌரவிக்கப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வகையில் 2024ம் ஆண்டிற்கான இவ்விருதுக்குரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருதில் ரூ.5 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் அடங்கும்.

கலைஞர் எழுதுகோல் விருதுக்கான தகுதிகள் பின்வருமாறு:

விண்ணப்பதாரர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

தமிழ் இதழியல் துறையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகளாகதொடர்ந்து பணிபுரிந்திருக்க வேண்டும். பத்திரிகைப் பணியை முழுநேரப் பணியாகக் கொண்டிருக்க வேண்டும்.

இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பங்காற்றியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரரின் எழுத்துகள் பொதுமக்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் நேரடியாகவோ, மற்றொருவர் பரிந்துரையின் அடிப்படையிலோபணிபுரியும் நிறுவனத்தின் பரிந்துரையின் பேரிலோ விண்ணப்பங்களை அனுப்பலாம்.

விண்ணப்பதாரர்களில் ஒருவரே விருதாளராக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்வு செய்யப் படுவார்.

குழுவின் முடிவே இறுதியானது.

மேற்காணும் தகுதிகளை கொண்ட விண்ணப்பங்கள், விரிவான தன் விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை 600009 என்ற முகவரிக்கு 30.04.2025க்குள்ளாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மாற்றுத்திறனாளிகள் குறித்த பேச்சு: நிபந்தனையற்ற வருத்தம் தெரிவித்தார் துரைமுருகன்



சென்னை, ஏப்.13

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

இயற்கையிலேயே உடலில் ஏற்பட்ட குறைபாடு உடையவர்களை அருவருக்கும் பெயர் கொண்டு, அவர்களை அழைத்து வந்ததை முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி கருணை உள்ளத்தோடு "மாற்றுத் திறனாளிகள்"" என்றுபெயரிட்டுஅழைத்தார். அதையே நாங்களும் பின்பற்றி வருகிறோம்.

அப்படிப்பட்ட நானே, ஒரு பொதுக்கூட்டத்தில் பேச்சின் வேகத்தில் மாற்றுத் திறனாளிகளை பழைய பெயரையே கொண்டு உச்சரித்து விட்டேன் என்று திமுக தலைவரும் முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் என் கவனத்திற்கு கொண்டு வந்த போது, நான் அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தேன். கலைஞரால் வளர்க்கப்பட்ட நானே இப்படிப்பட்ட தவறை செய்தது மிகப் பெரிய தவறாகும். மாற்றுத் திறனாளிகள் உள்ளம் புண்பட்டிருக்கும். அதற்காக என் நிபந்தனையற்ற வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், எந்தளவிற்கு வருந்தியிருப்பார் என்பது எனக்குத் தெரியும். அவருக்கும் என் வருத்தத்தை தெரிவித்து, இனி இத்தகைய நிகழ்வு நிகழாது என்று உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தாம்பரத்தில் 140 கிலோ கஞ்சா பறிமுதல்: ஒருவர் கைது



சென்னை ஏப்.13

சென்னை அருகே, தாம்பரம் மாநகர போலீசாருக்கு கிடைத்த நம்பகமான தகவலின் பேரில், தாம்பரம் சங்கர்நகர் பகுதியில் நேற்று (1042025) போலீசார் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகப்படும்படியான ஆந்திராவின் அனகப் பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த அப்பலநாயுடு என்ற நபரை சோதனை செய்து போலீசார் கைது செய்தனர். மேலும் அந்த நபரிடமிருந்து ரூ.14லட்சம் மதிப்புள்ள 140 கிலோ எடையுள்ள கஞ்சா மற்றும் செல்போனை போலீசார் பறிமுதல் செய்தனர்.

அப்பலநாயுடு, ஒடிசாவிலிருந்து ஆந்திரா வழியாக கஞ்சாவை அனகப்பள்ளி மாவட்டம் நரசிம்மபட்டியைச் சேர்ந்த அவரது கூட்டாளிகளானரகுமான், துர்கா ஆகியோரின் உதவியுடன் வாங்கி தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கஞ்சாவை கொண்டுவர அப்பலநாயுடுவுக்கு உதவிய ரகுமான், துர்கா ஆகிய இருவரையும் கைது செய்ய தாம்பரம் மாநகர போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கழக மேனாள் அமைப்புச்செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்...சேதுநாட்டு செல்லக்கிளி, சிறுகதை மன்னன் எஸ். எஸ். தென்னரசு நினைவேந்தல் நிகழ்ச்சி; அமைதி பேரணி



சிவகங்கை மாவட்டம் திருக்கோட்டியூரில் சட்டமன்ற மேனாள் உறுப்பினர், கழக மேனாள் அமைப்புச்செயலாளர், சிறுகதை மன்னன், சேதுநாட்டு செல்லக்கிளி என முத்தமிழறிஞர், தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்ட எஸ். எஸ். ட்டி என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப் பட்ட எஸ். எஸ். தென்னரசு அவர்களின் 34 வது நினைவுநாள் நிகழ்ச்சி 13.4.2025 அன்று காலையில் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்ட திமுக சார்பில் நடைபெறும் இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் மாவட்ட திமுக செயலாளரும் மாண்புமிகு கூட்டுறவுத்துறைஅமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் தலைமையில் தெனனரசு அவர்களின் சொந்தஇல்லத்திலிருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர்தூரம்வரை அமைதிப்பேரணியாக புறப்பட்டு நடந்து சென்று பின்னர் திருப்புத்தூர் சிவகங்கை சாலையில் தாளிபட்டியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது

ஆண்டுகள் தோறும் நடைபெறும்இந்தநினைவேந்தல் நிகழ்ச்சியில் மாநில, மாநகர, ஒன்றிய, நகர, தலைமைப்பொதுக்குழு செயற்குழு, சார் அணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை வழக்கம்போலவே சிவகங்கை மாவட்ட திமுக மற்றும் எஸ். எஸ். தென்னரசு குடும்பத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்...

## நெல்லையில் 298 கிராம் கஞ்சா பறிமுதல்: விற்றவர் கைது

திருநெல்வேலி, ஏப்.13

நெல்லை மாவட்டம், கல்லிடைக்குறிச்சி பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் திருமலைகுமார் தலைமையிலான போலீசார் நேற்று (1042025) ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது கல்லிடைக் குறிச்சியில் இருந்து மூலச்சி செல்லும் ரோட்டில் உள்ள சீராங்குளத்துக்கரை அருகேசந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த தென்காசி மாவட்டம், செங்கோட்டை மேலூர், சதியன்மேடு பகுதியை சேர்ந்த மகேஷ் (வயது 56) என்பவரை சோதனை செய்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்க கூடிய 298 கிராம் கஞ்சாவை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரிய வந்தது.

இதனையடுத்து சப் இன்ஸ்பெக்டர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு மகேஷை நேற்று கைது செய்தார். மேலும் அவரிடம் இருந்து 298 கிராம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர்.

## சென்னை விமான நிலையத்தில் கேரள தலைமறைவு குற்றவாளி கைது



சென்னை, ஏப்.13

கேரள மாநிலம் கோழிக்கோட்டை சேர்ந்தவர் ரோசித் ராஜீவன் (31). இவர் மீது பாலியல் பலாத்காரம் உள்ளிட்ட பல வழக்குகள் கோழிக்கோடு மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் பதிவாகியுள்ளது. ஆனால், ரோசித் தலைமறைவாகி விட்டார். இந்நிலையில் நேற்று முன்தினம் ஓமன் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் சென்னை வந்தது.

2 ஆண்டுகளாக, கேரள மாநிலம் கோழிக்கோடு குற்றப்பிரிவு போலீசால் போக்சோ மற்றும் கடத்தல், பாலியல் பலாத்கார குற்றத்தில் தேடப்பட்டு வரும் தலைமறைவு குற்றவாளி ரோசித் ராஜீவன் வந்திருந்தார். அவருடைய பாஸ்போர்ட் ஆவணங்களை பரிசோதித்த குடியுரிமை அதிகாரிகள் தேடப்பட்டு வரும் தலைமறைவு குற்றவாளி என்பதை கண்டுபிடித்தனர்.

விமான நிலைய போலீசுக்கு தகவல் தெரிவித்து, அவர் அடைத்து வைக்கப்பட்டு இருந்த அறைக்கு போலீஸ் காவலும் போடப்பட்டது. இதுபற்றி கோழிக்கோடு போலீஸ் சூப்பிரண்டுக்கு தெரியப்படுத்தினர். இதையடுத்து கோழிக்கோடு மாவட்ட குற்றப்பிரிவு தனிப்படை போலீசார், ரோசித் ராஜீவனை கைது செய்து, கேரளா கொண்டு செல்வதற்காக, சென்னை வந்தனர்.

## 9ம் வகுப்பு மாணவியின் ஆபாச புகைப்படங்களை செல்போனில் பகிர்ந்த 5 பேர் போக்சோவில் கைது

திருப்பத்தூர், ஏப்.13

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியை அடுத்த ஆலங்காயம், பூங்குளம் ரங்கன் வட்டம் பகுதியை சேர்ந்த 18 வயது வாலிபர் 9ம் வகுப்பு மாணவியுடன் கடந்த 6 மாதங்களாக செல்போன் மூலம் பழகி அவரை காதலிப்பதாக கூறி வந்துள்ளார். அப்போது மாணவியிடம் நைசாக பேசி, ஆபாசமாக வீடியோ மற்றும் புகைப்படம் அனுப்புமாறும், இல்லையென்றால் வீடு புகுந்து வெட்டி விடுவதாகவும் மாணவியை மிரட்டியுள்ளார். இதனால் பயந்து போன மாணவி தனது ஆபாச புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வாலிபருக்கு அனுப்பி வைத்துள்ளார். அதனை அந்த வாலிபர் தனது நண்பர்களுக்கு செல்போன் மூலம் பகிர்ந்துள்ளார். இதனை அறிந்த மாணவியின் தாயார் இதுகுறித்து ஆலங்காயம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் ஜெயகீர்த்தி வழக்குப்பதிவு செய்து, பூங்குளம் அடுத்த ரங்கன் வட்டம் பகுதியை சேர்ந்த 18 வயது வாலிபர், அவரது நண்பர்களான பூங்குளம் கிழக்கு வட்டம் பகுதியை சேர்ந்த ரஞ்சித், சந்தோஷ் மற்றும் 17 வயது சிறுவர்கள் 2 பேர் என 5 பேரை ஆலங்காயம் போலீசார் போக்சோ சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நாகர்கோவில் அருகே தண்டவாள பணியில் மண் சரிந்து விழுந்ததில் 3 தொழிலாளர் படுகாயம்



நாகர்கோவில், ஏப்.13

நாகர்கோவில் திருவனந்தபுரம் இரட்டை ரயில்பாதை பணிகள் நடந்து வருகிறது. இதற்காக நாகர்கோவில் ஜங்ஷன் ரயில் நிலையமும் விரிவாக்கப்பட்டு வருகிறது. நாகர்கோவில் ஜங்ஷன் ரயில் நிலையம் அருகே நெல்லை செல்லும் பாதையில் உள்ள குளத்தின் மேல் பகுதி வழியாக தண்டவாளம் செல்கிறது. பழைய தண்டவாளத்தின் கீழ் காங்கிரீட் குழாய் அமைக்கும் பணி நேற்று முன்தினம் நள்ளிரவில் நடந்தது. பொக்லைன் இயந்திரம் கொண்டு மண் தோண்டும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு இருந்தனர். அப்போது திடீரென மண் சரிந்து, சென்னை பெரம்பூரைசேர்ந்தஜானகி ரமேஷ்(47), பாளையங்கோட்டையை சேர்ந்த சிங்கம் மகாராஜன்(39), மேலூர் பகுதியை சேர்ந்த பாலமுருகன்(31) ஆகியோர் மீது விழுந்தது.


மற்ற தொழிலாளர்கள் உடனடியாக அவர்களை மீட்டு ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உடனடியாக மீட்கப்பட்டதால் மூவரும் உயிர் தப்பினர். மண் சரிந்ததால், காங்கிரீட் குழாய் அமைக்காமல், தோண்டப்பட்ட பள்ளம் மீண்டும் மூடப்பட்டது. தொடர்ந்து நேற்றுகாலை 6.30 மணிக்கு அந்த பாதையில் ரயில்கள் போக்குவரத்து தொடங்கியது. மண் சரிவால் கன்னியாகுமரி சூப்பர் பாஸ்ட் உள்ளிட்ட ரயில்கள் 4 மணி நேரத்துக்கு மேல் தாமதமாக வந்தன.

## தூத்துக்குடி: கொலை முயற்சி வழக்கில் வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது

தூத்துக்குடி, ஏப்.13

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின்பேரில், சாத்தான்குளம் பகுதியில் முன்விரோதம் காரணமாக கொலை முயற்சியில் ஈடுபட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட சாத்தான்குளம், பேய்குளம் பகுதியைச் சேர்ந்த தேவதிரவியம் மகன் மைக்கேல்(எ) ராஜ மைக்கேல் (40) என்பவரை நேற்று (10.04.2025) சாத்தான்குளம் போலீசார் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## வெள்ளியங்கிரி மலை ஏறிய காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பக்தர் பலி




கோவை, ஏப்.13

வெள்ளியங்கிரி மலை ஏறிய காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ரமேஷ்(42) என்ற பக்தர் மூச்சு திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். கோயில் நிர்வாகத்தினர்,

வனத் துறையினர் இணைந்து அவரது உடலை கீழே இறக்கினர். இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 107.7 அடியானது



மேட்டூர், ஏப்.13

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து, ஒகேனக்கல் மற்றும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பதும், சரிவதுமாக உள்ளது. ஒகேனக்கல்காவிரியில் நேற்று முன்தினம் 1,200 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 1,000 கனஅடியாக சரிந்தது. இதேபோல், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் 922 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 436 கனஅடியாக குறைந்தது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் 107.79 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று 107.73 அடியாக சரிந்துள்ளது. நீர்இருப்பு 75.22 டிஎம்சியாக உள்ளது.

## சென்னை செனாய் நகரில் கட்டுமான நிறுவனத்தில் ED அதிகாரிகள் நடத்திய 16 மணிநேர சோதனை நிறைவு




சென்னை, ஏப்.13

சென்னை செனாய் நகரில் கட்டுமான நிறுவனத்தில் ED அதிகாரிகள் நடத்திய 16 மணிநேர சோதனை நிறைவடைந்தது. நேற்று காலை 10.40 மணிக்கு தொடங்கிய சோதனை இன்று அதிகாலை 3.25 மணிக்கு நிறைவடைந்தது.

செனாய்நகரில் செயல்பட்டு வரும் அப்ரிதா என்ற கட்டுமான நிறுவனத்தில் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தினர்.

## தேவகோட்டை ஸ்ரீ வெற்றிவேல் முருகன் கோவில் பால்குடம்





தேவகோட்டை பழைய சருகனி ரோடு ஸ்ரீ வெற்றி வேல் முருகன் திருக்கோயில் பால்குடம் எம் எல் ஏ மாங்குடி வழிபாடுசிவகங்கை மாவட்டம்தேவகோட்டைபழைய சருகனி ரோடு பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ வெற்றிவேல் முருகன் திருக்கோயிலில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு அம்மாச்சி ஊரணி சொர்ண விநாயகர் கோவிலில் இருந்து 50க்கும் மேற்பட்ட பக்தர்கள்பால்குடம் எடுத்து நகரின் முக்கிய வீதிகளில் வழியாக ஊர்வலமாக கோவிலுக்கு சென்று நேத்திகடன் செலுத்தினார் அதைத்தொடர்ந்து முருகனுக்கு அபிஷேகம் நடைபெற்றது அலங்காரங்கள் பிரபு பூஜைகள் இதில் காரைக்குடி எம்எல்ஏமாங்குடி கலந்து கொண்டு வழிபாட்டிகளை சிறப்பித்தார் மற்றும் கட்சி உறுப்பினர்கள் ஊர் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர் 3000 அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது

## பள்ளிகளில் ஆதார் பதிவு செய்து சாதனை: தமிழக கல்வித்துறைக்கு ஒன்றிய அரசு பாராட்டு




சென்னை, ஏப்.13

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் கூறியதாவது: முதல்வரின் திராவிட மாடல் ஆட்சியில் பள்ளி மாணவர்களுக்கு பல் வேறு திட்டங்களின் வழியாக உதவித் தொகை மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகிறோம்.

இதற்கு வங்கி கணக்கு தொடங்க வேண்டும் என்றால் மாணவரின் ஆதார் எண் அவசியம். இந்நிலையில் தான் 2024 பிப்ரவரி 23ம் தேதி, மாணவர்கள் படிக்கும் பள்ளியிலேயே ஆதார் பதிவு திட்டத்தை தொடங்கி வைத்தோம்.

இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் படிக்கும் ஒட்டுமொத்த மாணவ மாணவியர் எண்ணிக்கையில் 70 சதவீத மாணவ மாணவியருக்கு புதிய ஆதார் பதிவு மற்றும் புதுப்பித்தல் பணி துல்லியமாக மேற்கொள்ளப்பட்டு, சிறந்த இலக்கை தமிழக அரசு எட்டியுள்ளது. ஆதார் பதிவை துல்லியமாக மேற்கொண்டு முதலிடம் பெற்றதற்காக ஒன்றிய அரசின் தனித்துவ அடையாள ஆணையம் நமது பள்ளிக்கல்வித் துறைக்கு சாதனையாளர் விருது வழங்கி கவுரவித்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

★ 62 லட்சம் பேர் பயன்....

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியர் மொத்தம் 1 கோடியே 12 லட்சத்து 81 ஆயிரத்து 426 பேர். அவர்களில் ஆதார் பதிவு மேற்கொள்ளப்பட்டவர்கள் 13 ஆயிரத்து 437, கட்டாய பயோமெட்ரிக் புதுப்பித்தல் செய்யப்பட்டவர்கள் 16 லட்சத்து 6 ஆயிரத்து 961 பேர். ஏற்கனவே புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டு கண்டறியப்பட்டவர்கள் 62 லட்சத்து 25 ஆயிரத்து 210 பேர் ஆவர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

13.4.2025

# நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி ஆண்டுவிழா




காங்கேயம் அடுத்துள்ள அரச்சலூர் நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் 31 வது ஆண்டு விழா நேற்று நடைபெற்றது. விழாவில் கல்லூரி செயலாளர் கோ. செந்தில்குமார் வரவேற்புரையாற்றினார். கல்லூரியின் தலைவர் டி.கே.தாமோதரன்தலைமையுறையாற்றினார். பொருளாளர் சி. பழனிச்சாமி சிறப்புரையாற்றினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் இரா.கனிஎழில் 2024 2025 ஆம் கல்வி ஆண்டிற்கான ஆண்டறிக்கையை வாசித்தார். அதைத் தொடர்ந்து கல்லூரி கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக 11:11 படக் குழுவினர்களான கிங்ஸ் கார்பியன் புரொடக்ஷன் தயாரிப்பாளர் டி. விஸ்வநாத், பாண்டி கமல், நிரோஷா, திரைப்பட பாடல் ஆசிரியர், ஒளிப்பதிவாளர் ராகவாஹரிகேசவா,தயாரிப்பாளர் திருமலை அழகன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவிகளை உற்சாகப்படுத்தும் விதத்தில் ஆட்டம் பாட்டத்துடன் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். அதனையடுத்து 2024 2025 ஆம் கல்வி ஆண்டில் பாடவாரியாக முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கும் மற்றும் பேராசிரியர்களுக்கும் பாராட்டு மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.பின்னர் கல்லூரி மாணவிகளின் கண்கவரும் கலைநிகழ்ச்சிகள் கோலாலமாகநடைபெற்றன.

இதில் பெற்றோர்கள் மற்றும் பேராசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக கல்லூரியின் துணை முதல்வர் வி. சீனிவாசன் நன்றி கூறினார்.



இடைக்காட்டூர் ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் பங்குனி உற்சவ பெருவிழா திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது நேற்று பக்தர்கள் காவடி வேல் பூக்குழி இறங்குதல் போன்ற நேர்த்தி கடனை செலுத்தினர் ஊர் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

# தமிழ்நாடு ஆளுநர் ஆர் .என். ரவி,க்கு சிவகங்கை கலெக்டர் ஆஷா அஜித் மலர்க்கொத்து கொடுத்து வரவேற்ற காட்சி



தமிழ்நாடு ஆளுநர் ஆர் என் ரவி சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையில் அமைந்துள்ள கம்பன் அருட்கோவிலுக்கு காளையார் கோவில் வட்டத்திற்கு உட்பட்ட கருதுபட்டி கிராமத்தில் கிராமத்தில் நிகழ்ச்சியில் பங்கேற்பதராக வருகை தந்துள்ளதை முன்னிட்டு ஆட்சித் தலைவர் ஆஷா ஆஜித்சிவகங்கை வேலு நாச்சியார் விருந்தினர் மாளிகையில் மலர் கொத்து வழங்கி வரவேற்றினார்

# குன்றக்குடியில் உள்ள இன்று வீர காளியம்மன் கோவிலில் முகூர்த்தக்கால் நிகழ்ச்சி



குன்றக்குடியில் உள்ள இன்று வீர காளியம்மன் கோவிலில் முகூர்த்தக்கால் நிகழ்ச்சி நடைபெற்றது

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற வீரகாளி அம்மன் கோவில்கும்பாபிஷேகம் விழா வரும் ஏப்ரல் 20 ஆம் தேதி நடைபெறுவதையொட்டி இன்று காலை முகூர்த்த கால் ஊன்றும் நிகழ்ச்சி குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல அடிகளார் தலைமையில் நடந்தது கோவில் நிர்வாகிகளும் பொதுமக்களும் முக்கிய பிரமுகர்களும் முகூர்த்தக்கால் ஊன்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

# சாலையோரம் நின்ற லாரி மீது ஆம்புலன்ஸ் மோதி தம்பதி பலி

திருப்பூர், ஏப்.13

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையை சேர்ந்தவர் முருகன் (64). உடல்நலமில்லாத இவரை கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்க தனியார் ஆம்புலன்சில் நேற்று முன்தினம் இரவு மனைவி கல்யாணி (60), மகள் பபிதா ஆகியோர் அழைத்து சென்றனர்.

ஆம்புலன்சை கவியரசன் ஓட்டினர். உதவியாக விஜய் என்பவரும் பயணித்துள்ளார். நேற்று அதிகாலை திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே பெரும்பாடி பகுதியில் ஆம்புலன்ஸ் வந்தபோது, சாலையோரம் நின்ற லாரி மீது மோதி முருகன், கல்யாணி ஆகியோர் உயிரிழந்தனர். மற்ற 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

# திருப்புவனத்தில் புதிய பேருந்துகளை கொடியசைத்து தொடங்கிவைத்த சட்டமன்ற உறுப்பினர்: தமிழரசி ரவிக்குமார், சேர்மன் சேங்கைமாறன், ஏனாதி கடம்பசாமி, நாகூர் கனி , ரஹமதுல்லாகான் பங்கேற்பு



சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்திலிருந்து பூவந்தி, மில்கேட் வழியாக மேலூர் மார்க்கமாக ஒரு பேருந்தும், மேலூர் முதல் மில்கேட், பூவந்தி வழியாக திருப்புவனம் வரையிலும் ஒரு பேருந்தையும் ஆக மொத்தம் இரண்டு புதிய பேருந்துகளை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் , திருப்புவனம் பேரூராட்சி தலைவரும், மாவட்ட திமுக துணைச் செயலாளருமானத. சேங்கைமாறன் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

இதனிடையே பொது மக்களுடன் சேர்ந்து சட்டமன்ற உறுப்பினர்தமிழரசி, சேர்மன் சேங்கைமாறன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பேருந்து பயணச்சீட்டுகள் பெற்று சிறிது தூரம் பயணம் செய்தனர்.

போக்குவரத்து பணிமனை அலுவலர்கள், ஊழியர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் திருப்புவனம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏனாதி கடம்பசாமி , பேரூர்க்கழக செயலாளர் நாகூர் கனி, மீனாட்சசுந்தரம், பேரூராட்சி துணைத்தலைவர் ரஹமதுல்லாஹான், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் மேலவெள்ளூர் தேவதாஸ், அறிவுக்கரசு, பேரூர் இளைஞரணி கண்ணன், மாவட்ட பிரதிநிதிகள் ஏனாதி இராமலிங்கம், ஈஷ்வரன் , சுப்பையா , மாவட்ட விவசாய அணி டி. ஆர். சேகர், மேனாள் கவுன்சிலர் ஆறுமுகம், அரசு ஒப்பந்ததார் சங்கத் தலைவர் மணிமுத்து, மடப்புரம் மகேந்திரன், பழையனூர் ஊராட்சி மேனாள் தலைவர் சுப்பிரமணியன், தண்டீஷ்வர அய்யனார் கோவில் அறங்காவலர் தலைவர் மயில்வண்ணன், பாலகிருஷ்ணன் , அண்ணாமலை, பாலகிருஷ்ணன், ஊர்க்காவலன், மாணவரணி காளிதாஸ், பாண்டியார் கிருஷ்ணன் , இலக்கிய அணி பிரபு, கணேஷ்பிரபு , வேல் பாண்டி, ஒன்றிய மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் தங்கப்பொண்ணு , பால் பண்ணை கிருஷ்ணன், ஐடி விங் பாலகிருஷ்ணன், புவணேஷ்வரன் , திருப்பதி, மாரி உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...

# பாலிவுட்டில் பிரமாண்ட படம் இயக்கும் பா.ரஞ்சித்



தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனர்களில் ஒருவர் பா.ரஞ்சித். இவர் தற்போது 'வேட்டுவம்' என்ற புதிய படத்தை எழுதி இயக்கி வருகிறார். இந்த திரைப்படத்தில்அட்டகத்தி தினேஷ்கதாநாயகனாகநடிக்க, ஆர்யாவில்லனாக நடிக்க உள்ளார்.

இந்நிலையில், இயக்குனர் பா.ரஞ்சித் அடுத்ததாக இந்திய கிரிக்கெட் வீரரின் வாழ்க்கை வரலாற்றை படமாக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. அதன்படி, இந்தியாவின் முதல் தலித் கிரிக்கெட் வீரர் என அறியப்படும் பல்வங்கர் பலூவின் வாழ்க்கை வரலாற்றை மையமாக கொண்டு ராமச்சந்திர குஹா எழுதிய 'எ கார்னெர் ஆப் எ பாரின் பீல்டு' (A CORNER OF A FOREIGN FIELD) புத்தகத்தை தழுவி படமாக எடுக்க தனக்கு அழைப்பு வந்துள்ளதாக நிகழ்ச்சி ஒன்றில் ரஞ்சித் தகவல் தெரிவித்திருக்கிறார்.

மேலும், இப்படம் பேச்சுவார்த்தை நிலையில் தற்போது உள்ளதாகவும், விரைவில் அடுத்தடுத்த கட்டத்திற்கு நகரும் என நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# நடிகை சுமையாவின் 'டியர் உமா' பட டிரெய்லர் வெளியீடு





நடிகை சுமையா ரெட்டி மற்றும் பிருத்வி அம்பர் ஆகியோர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'டியர் உமா'

இப்படத்தில் சுமையா ரெட்டி கதாநாயகியாக நடித்தது மட்டுமில்லாமல், தனது சுமா சித்ரா ஆர்ட்ஸ் பேனரின் கீழ் படத்தை தயாரித்தும் இருக்கிறார்.

சாய் ராஜேஷ் மகாதேவ் இயக்கியுள்ள இந்தப் படம் வருகிற 18ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. இந்நிலையில், இப்படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது.

# அடையாளம் தெரியாத அளவிற்கு மாறிய மாநகரம் பட நடிகர்... ரசிகர்கள் அதிர்ச்சி



2012ம் ஆண்டு வெளியான 'வழக்கு எண் 18/9' படத்தின் மூலம் தமிழ்சினிமாவில்நடிகராகஅறிமுகமானார்ஸ்ரீ. தெருவில்தள்ளுவண்டி கடை வைத்திருக்கும் கேரக்டரில் அப்படியே பொருந்தி இருந்தார். படத்தில் அவரது நடிப்பு பெரிதும் பாராட்டப்பட்டது. தொடர்ந்து 'ஓநாயும்ஆட்டுக்குட்டியும்', 'வில்அம்பு', 'மாநகரம்'படங்கள்அவருக்கு கைகொடுத்தன. கடந்த 2023ம் ஆண்டு 'இறுகப்பற்று' படம் வெளியாகி ரசிகர்களின் கவனம் ஈர்த்தது. ஆனால் அதன்பிறகு அவர் எந்தப் படங்களிலும் நடிக்கவில்லை. தமிழ்சினிமாவில் மிகப்பெரிய அளவில் வலம் வருவார் என எதிர்பார்த்த நிலையில், நல்ல படங்களை கொடுத்தும் முன்னணி இடத்திற்கு இவரால் செல்ல முடியவில்லை.

பிக்பாஸ் தமிழ் சீசன் 1 நிகழ்ச்சியிலும் போட்டியாளராக கலந்து கொண்டார். சில வருடங்களாக இவரை காணாமல் ரசிகர்கள் இவருக்கு என்ன ஆச்சு எதனால் திரைப்படங்களில் தொடர்ந்து நடிக்கவில்லை என்று கேள்வி எழுப்பி வந்தனர்

இந்த நிலையில், இவருடைய சமீபத்திய வீடியோ ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த வீடியோவில் வரும் அவருடைய புகைப்படங்களை பார்த்த ரசிகர்கள் பலரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# அஜித் மற்றும் எம்.எஸ்.தோனியுடன் உள்ள வீடியோவை பகிர்ந்த யோகிபாபு



நடிகர் யோகி பாபு தற்போது தமிழ் சினிமாவில் காமெடி நடிகராக மட்டுமல்லாமல் ஹீரோவாகவும் பல படங்களில் நடித்து வருகிறார். நெல்சன் இயக்கிய 'கோலமாவு கோகிலா' படத்தில் யோகி பாபுவின் நடிப்பு பட்டிதொட்டி எங்கும் பரவியது. கடந்த 10ம் தேதி அஜித் நடிப்பில் வெளியான 'குட் பேட் அக்லி' படத்தில் யோகி பாபு நடித்திருந்தார். தற்போது ரஜினியின், ஜெயிலர் 2 படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், நடிகர் அஜித் மற்றும் கிரிக்கெட் வீரர் எம்.எஸ்.தோனியுடன் உள்ள வீடியோவை யோகிபாபு பகிர்ந்துள்ளார். இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

# ஹாலிவுட் இயக்குனருடன் இணைந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ



கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ இயக்குநர் மேத்யூ வாகனுடன் இணைந்து உருவாக்கியுள்ள நிறுவனத்துக்கு 'யுஆர். மார்வ்' என்று பெயர் சூட்டியுள்ளதாக அறிவித்துள்ளார்.

உலகப்புகழ்பெற்றகால்பந்துவீரரானகிறிஸ்டியானோ ரொனால்டோ தற்போது திரைத்துறையில் ஆர்வம் காட்டியுள்ளார். சினிமாவில் புதிதாக ஒரு தயாரிப்பு நிறுவனம் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளார். இந்த நிறுவனத்தை ஹாலிவுட் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் மேத்யூ வாகனுடன் இணைந்து உருவாக்கியுள்ளதாக கூறும் அவர் நிறுவனத்துக்கு 'யுஆர். மார்வ்' என்று பெயர் சூட்டியுள்ளதாக அறிவித்துள்ளார்.

மேலும் இந்த நிறுவனத்தின் தயாரிப்பில் முதல் படம் விரைவில் வெளியாகும் எனத் தெரிவித்துள்ளார். இது தொடர்பான அறிவிப்பில் ரொனால்டோ குறிப்பிட்டிருப்பதாவது, "ஒரு மகிழ்ச்சியான புது அத்தியாயம் இது. பிஸுனஸில் எனது புதிய முயற்சியை எதிர்நோக்கி காத்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஒரு அறிவிப்பு வீடியோவையும் ரொனால்டோ தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில் மேத்யூ வாகனின் படம் தொடர்பான காட்சிகளும் ரொனால்டோ விளையாடும் கால்பந்து தொடர்பான காட்சிகளும் இடம் பெற்றுள்ளது. விரைவில் ரிலீஸ் குறித்த அறிவிப்பும் வரும் என குறிப்பிட்டிருப்பதால் அதை நோக்கி அவரது ரசிகர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

# பூரன், மார்க்ரம் அதிரடி.. குஜராத்தை வீழ்த்தி லக்னோ அசத்தல் வெற்றி



ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ்குஜராத்டைட்டன்ஸ்அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற லக்னோ அணியின் கேப்டன் ரிஷப் பண்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த குஜராத் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 180 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக சுப்மன் கில் 60 ரன்கள் அடித்தார். லக்னோ தரப்பில் ரவி பிஷ்னோய் மற்றும் ஷர்துல் தாகூர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 181 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய லக்னோ அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக மார்க்ரம் ரிஷப் பண்ட் களமிறங்கினர். இதில் பண்ட் நிதானமாக விளையாட மார்க்ரம் அதிரடியாக களமிறங்கினார். ஓரளவு தாக்குப்பிடித்து விளையாடிய பண்ட் 28 ரன்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து மார்க்ரமுடன்கைகோர்த்தநிக்கோலஸ்பூரனும்அதிரடியில்பட்டையைகிளப்பலக்னோவெற்றியை நோக்கி வெகுவாக முன்னேறியது. இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். அரைசதம் அடித்த சிறிது நேரத்திலேயே மார்க்ரம் 58 ரன்களிலும், நிக்கோலஸ் பூரன் 61 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

இவர்கள் ஆட்டமிழந்த பின் குஜராத் பந்துவீச்சாளர்கள் லக்னோ அணிக்கு சிறிது நெருக்கடி கொடுத்தனர். டேவிட் மில்லர் 11 பந்துகளை எதிர்கொண்டு 7 ரன்கள் மட்டுமே அடித்தது ஆட்டத்தை இறுதி ஓவர் வரை கொண்டு சென்றது. இருப்பினும் இறுதி கட்டத்தில் ஆயுஷ் பதோனி 28 ரன்கள் அடித்து அணியை வெற்றி பெற வைத்தார்.

19.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த லக்னோ 186 ரன்கள் அடித்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றியை பதிவு செய்தது. குஜராத் தரப்பில் பிரசித் கிருஷ்ணா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.